[2015 செப்டம்பர் 25

பிற்பகல் 12–35

(ஆ) கரும்பு விவசாயிகளுக்கு பாக்கித் தொகை வழங்கப்படாமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சவுந்தரராசன், என்ன சொல்லுங்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *கரும்பு விவசாயிகளுக்கு 800 கோடி ரூபாய்க்குமேல் பாக்கி இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு பாக்கித் தொகை வழங்கவேண்டுமென்று கேட்டோம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் 5 ஆம் தேதி அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் பதில் சொன்னார்கள். அதற்குப் பிறகு இத்தனை நாட்கள் ஆகியிருக்கிறது. பதில்தான் வந்ததே தவிர பணம் வரவில்லை. எங்கு பார்த்தாலும் ஓரே போராட்டமாக இருக்கிறது. நாங்கள் பதில் சொல்ல முடியவில்லை. ஆகவே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தை . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சவுந்தரராசன், நீங்கள் வாய்ப்புக் கேட்டதற்கு அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடுகள்) ஆனால், நீங்கள் நீண்ட உரையாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை. கவனத்தை ஈர்க்கும் விதமாக நீங்கள் பேசினால் பரவாயில்லை. நீண்ட விளக்கத்தைக் கேட்டால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

(இ) பாச்சலூர் மலையிலே தனியார் பட்டா நிலங்களில் கட்டியுள்ள தடுப்பணைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *செல்வி கே. பாலபாரதி, என்ன சொல்லுங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே பிரச்சினைதான். திண்டுக்கல்லில் குடிநீர் பிரச்சினை இருக்கிறது. அதுகுறித்து கவன ஈர்ப்பு கொடுத்தேன். பாச்சலூர் மலையிலே செக் டேம் கட்டப்பட்டதால் கால்வாய் எங்கு முடிவடைகிறது என்று தெரியவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) செல்வி பாலபாரதி, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார் அல்லவா?*

2015 செப்டம்பர் 25]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாச்சலூர் மலைப் பகுதியில் தனியாரது பட்டா நிலங்களில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள், மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், மண் அரிப்பைத் தடுக்கும் பணியின்கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் கட்டப்பட்டவையாகும். வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் வருவாய்த் துறையினர் இணைந்து ஆய்வுகள் மேற்கொண்டு, பொதுப் பணித் துறையின் ஓடைகளுக்குக் குறுக்கே அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) கரும்பு விவசாயிகளுக்கு பாக்கித் தொகை வழங்கப்படாமை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஆறுமுகம், என்ன சொல்லுங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் எழுந்து நின்று கேட்டால் எப்படி? ஒரு கட்சியிலே உள்ள 10 பேரும் எழுந்து நின்று கேட்டால் எப்படி?*

திரு. எம். ஆறுமுகம்: *தமிழகத்தில் இருக்கும் கரும்பு விவசாயிகளுக்கு 800 கோடி ரூபாய் பாக்கி தராமல் வைத்துக்கொண்டிருப்பது சம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவன ஈர்ப்பு என்பது யாராவது ஒருவர்தான் பேச முடியும். ஒரே கட்சியில் 10 பேர் கை தூக்கினால் நான் எப்படி அனுமதிக்க முடியும்?*

திரு. எம். ஆறுமுகம்: *அதை எடுத்து விவாதிப்பதற்கும், விவசாயிகளுக்கு பாக்கிப் பணம் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.*